உதயதாரகை.—MORNING STAR.

Published on the 2d and 4th Thursday of every Month at one shilling a Quarter payable in advance.

ச. புத். சஞ். ௰௫.] ௯௮௱௪௪ ௵. ஆவணி ௴. அ. தேதி வியாழக்கிழமை, Thursday, August 8, 1844. [Vol. IV. No. 15.

உதயதாரகை தனக்கதிபதியாகிய மதிநிறை மைனர்க்குத் துதியொடு வந்தனம்.

வீரமாமுனிவர் செய்த ஞானவுணர்ச்சியென்னும் பிரபந்தம் போன சஞ்சிகையிலே சமாப்தம் பெற்றமையால் இனிவரும் மற்றச் சஞ்சிகைகளிற் பதிப்பிக்கும் பொருட்டு அதற்கினமாகிய வேறொருநூல் அவசியம் வேண்டுமெனக் கண்டு நித்தியாநித்திய வித்தியாசமென்னும் ஓர் திவ்விய பிரபந்தத்தை இத்துடன் அனுப்புகிறேன். அந்நூலினாசிரியரின்னாரென்பது தெரியவில்லை. அது செந்தமிழ் நடையிற் செவ்விதிற் பயில விரும்பிய மாணாக்கர்களுக்கு முக்கிய சாதனமாய் இருப்பதுமன்றி ஆன்மார்த்தம் பெறக் கருதிய பக்குவான்மாக்களுக்கும் மிகவும் உபயோகமாய் இருக்குமெனத் துணிந்துகொள்க.

௯௮௱௪௪ம் ஆண்டு ஆவணி ௴ உந் தேதி. } இப்படிக்கு, சின்னையர்.

நித்தியாநித்திய வித்தியாசம்.

முகவுரை.

சிஷ்டபரிபாலரான பரமகத்தரானவர் பரமகதியென்கிறமோட்சத்தை மனிதனுக்குக்கொடுக்கக்கர்த்ததத்துவமுள்ளவராயிருக்கிறபடியினாலே மனிதனானவனப்படிப்பட்ட பரமகதியை எளிதாய் அடையத்தக்கதாக உலக பிரபஞ்சங்களை ஒருதவியான எத்தனத்தைப்போலேகட்டளையிட்டருளிச்செய்தார். இப்படியிருக்கையில் மனிதன் சொல்லப்பட்ட பிரபஞ்ச வாழ்வுகளைப் பரமகத்தரானவர் கட்டளையிட்ட நியாயத்தின்படியே அனுபவியாமற் கிரமந் தப்பி அவைகளெல்லாங் கதியென்றெண்ணி அவைகளைப் பிரியாத நேசத்துடனே பற்றிவருகிறதினாலே தன்னுடைய ஈடேற்றத்துக்கு விரோதம் பண்ணிக்கொண்டுவருகிறான். இதுவுமன்றி அவைகள் நன்மை சித்திக்க உண்டாக்கப் பட்டிருக்கையில் மனிதனானவன் அவைகளை அனுபவிக்கிறதிலே பாவத்தைக் கட்டிக் கொள்ளுகிறதினால் தனக்கு நரகமென்கிற ஆக்கினை வரப்பண்ணுகிறான். கொஞ்சநாளைக்கு மாத்திரம் (அநித்தியமாய்) இருக்கிற பிரபஞ்ச வாழ்வுகளை நம்பினதற்கு நித்திய மோட்சராச்சியத்தை இழந்து முடிவில்லாத ஆக்கினைக்குப் பாத்திரமாய்ப் போகிறான். ஆகையால் அந்தக் கொடிய ஆக்கினைகளுக்கும் இழந்துபோன நல்ல மோட்சராச்சியத்தின் நித்திய பாக்கியங்களுக்கும் எத்தனை வேற்றுமை உண்டாயிருக்குமென்பது இதிலே காண்பிக்கப்படுமென்கிறதினால் இந்த நிபந்தனத்துக்கு நித்தியாநித்திய வித்தியாசம் என்னுங் காரணப் பெயருண்டாயிற்றென்றறி. ஆனால் நரகமோட்சங் கண்டதாரென்று தீதுலகர்சொல்லை மனதிலே வைத்தாய். ஆகில் நரகமோட்சமில்லையென்றுநினையாதே. அதேனென்றால் உன்னுடைய ஆத்துமத்தையும் உன்னைப் படைத்த பராபர வஸ்துவையும் நீ காணாதிருந்தாலும் உனக்கு ஆத்துமமில்லையென்றும் பரம கத்தரில்லையென்றும் சொல்லவுங் கருதவும் வேண்டாம். சொன்னாயாகில் துர்க்கந்த நரகத்தில் விழுகிற பேர்களில் நீ ஒருத்தனென்றும் பேரின்ப மோட்சத்தின் சிறந்த பாக்கியம் எப்படியென்றும் துர்க்கந்தநரகத்தினித்திய ஆக்கினைகள் எப்படியென்றும் சமஸ்தமனிதருக்கும் வருகிற மரணமெப்படியென்றும் தனித்தீர்வை பொதுத்தீர்வை வகுப்பறுக்கிற வகை எப்படியென்றும் பாதகத்தின் றீவினை எத்தனையென்றும் தேவ இஷ்டப்பிரசாதத்தின் சலாக்கியம் எப்படியென்றும் மனிதருடைய கதி இன்னதென்றும் இயன்றமாத்திரம் ஒவ்வொன்றாய்ப் பிரிவுடனே வெளிப்படுத்தித் தருகிறோம். அவைகளை நான் வாசித்துப்பார்த்தது மாத்திரம் போதுமென்று மதியாமற் கண்ட நியாயத்தின்படியே என்னாலே கூடியமட்டும் நடப்பேனென்று துணிந்து ஸ்திரமுள்ள மனதுவைத்தால் உனக்குப் பசாசென்கிற சத்துரு செயமுண்டாம். சுகிர்த புண்ணியங்களைச் செய்ய வீரசூரனாவாய். பழுதற்ற பரமகதிசேருதலைக் காண்பாய். நரகத்தின் வாதைகளுக்கஞ்சாமல் மோட்சவாசிகளோடே ஆனந்தமோட்சத்திலே சிந்தைமகிழ்ந்து ஊழியுள்ளளவும் வாழ்ந்திருப்பாய்.

முகவுரை முற்றிற்று.

முதல் வித்தியாசம்.

காரண திவ்விய பரமசற்குருவான இயேசுநாதர் திருவுளம்பற்றி அருளிச்செய்த வேதத்தின் வாசகமானதில் "ஈத்தேமாலே தீக்தேயின் யீகனே மெத்தேறனோம்" என்பது நிர்ப்பாக்கியமுள்ளவர்களே நித்தியாக்கினியிலே போங்களென்றவாறு. சர்வ சீவாத்துமாக்களையும் படைத்துச் சர்வத்துக்கும் நீதி வல்லவராயிருக்கிற தயாபரரான பரமகத்தரானவர் தாம் படைத்த மனிதரென்னப்பட்ட யாவருக்குந் தம்முடைய மட்டில்லாத பேரின்ப தெரிசனமாகிய ஆனந்த மோட்சத்தைக்கொடுக்கக் கர்த்ததத்துவமுள்ளவராய் இருக்கிறார். ஆனாலும் உலகராசாக்களைச் சேவித்து நிற்கிற பேர்களில் இராசாவினுடைய மனசுக்குப் பிரியவானாகிறாப் போலே நடக்கிறவனுக்கு மாத்திரம் வரிசை கிடைக்குமல்லாமல் நடவாதவன் இராசாச் செய்கிற வெகுமானத்தை இழக்கிறதுமன்றி அவருடைய மனசுக்கு இடறுபண்ணினால் ஆக்கினை அனுபவிப்பானென்கிறதுபோலச் சர்வத்துக்கும் இராசாதிராசனாய் இருக்கிற பரமகத்தரானவர் தாம் படைத்த சனங்களென்னப்பட்ட மனிதரில் தம்முடைய சித்தத்தின்படியே நடக்கிற பேர்களுக்குமாத்திரம் ஆனந்த மோட்சத்தைச் சம்பாவனையாகக் கொடுப்போமென்றும் நடவாத பேர்களுக்கு ஆக்கினையாக அவர்களை முடிவில்லாத அக்கினி நரகச் சமுத்திரத்திலென்றென்றைக்கும் பாடுபடத் தள்ளுவோமென்றும் அறிக்கைபண்ணத் திருவுளமானார் இப்போது அவரவர்களுக்கு மோட்சங் கொடுக்கிறதும் அவரவர்களை நரகத்திலே தள்ளுகிறதும் எந்த நியாயத்தோடே தீர்வையிட்டாரென்று நாமெல்லாருமறிய உலகமுடியுங்காலத்திலே வந்து செத்தவர்களெல்லாரையும் ஆத்துமசரீரத்தோடெழுப்பி அவரவர் செய்த பாவ புண்ணியங்கள் எல்லாவற்றையும் அறியப்பண்ணிப் பொல்லாதவர்களை நரகத்திலே தள்ளி நல்லவர்களை ஆத்துமசரீரத்தோடென்றென்றைக்கும்நித்தியபேரின்பத்தை அடைய மோட்சராச்சியத்திற் கூட்டிக்கொண்டு போவார். அப்படியே நீ நரகத்திலே தள்ளுண்டுபோகாதபடிக்குப் பரம கத்தருடைய சித்தத்தின்படியே நடக்கவேண்டும். அவர் சித்தத்தின்படியே நடக்கிறதெப்படியென்றால் அவர் கட்டளையிட்ட வேத கற்பனையின்படியே பழுதற்ற சுகிர்தபுண்ணியங்களிலே நடந்து அதை அனுசரிக்கிறதே அவர் சித்தத்தின்படி நடக்கிறதென்றறியலாகும். புணணியத்துக்கு நேரிட்டிராமலிருக்கிற துர்க்கிரியையாகிய பாவத்தைச் செய்வதே கத்தருடைய திருச் சித்தத்துக்கு இடறுபண்ணுகிறதென்று சொல்லலாகும். இப்படிப் பட்டவர்களுக்குத் துர்க்கந்த நரகம் சித்திக்குமென்பதற்குச் சந்தேகமில்லை. அப்படிப்பட்ட துர்க்கந்த நரகத்திலே நீயும் விழாதபடிக்கு அதிலே படுகிற சொல்லில் அடங்காத ஆக்கினைகளை எவ்வளவாகிலுஞ் சொல்லப்படுகிற நியாயங்களிலே கண்டுபிடித்து அதை மனசிலே வைத்துப் புணணியத்தை மாத்திரம் விரும்பிப் பாவத்தை நிராசனைபண்ணுவாயென்கிறதினால் துர்க்கந்த நரகம் இன்னதென்று உனக்கு வெளிப்படுத்தித் தருவோம். அதெப்படியென்றால், பூமி பாதாளத்திலே மகா விலாசமுள்ள குழியானதினாலே கரைகாணாத சமுத்திரம்போல எங்கேபார்த்தாலும் அக்கினி சுறுசுறென்றெரிகிறது மாய்ச் சந்திரசூரியருடைய வடிவுகளைக்காணாமல் எப்பொழுதும்

இருளடைந்த இருட்டறையாய் இருக்கிறதுமாய் விஷமுள்ள துர்க்கந்தங்கள் எந்நேரமும் வீசப்படுகிறதுமாய் எண்ணிக்கையிலடங்காத கடூரமுள்ள நோயென்னப்பட்டதெல்லாம் வளருகிறதுமாய்க் கொடுமையான இடிகள் இடைவிடாமல் இடித்து முழங்கப்படுகிறதுமாய அக்கிரமமான கோவென்றழுகிற சத்தங் கேட்கப்படுகிறதுமாய் எண்ணப்படாத பசாசுக்கள் கதறியலறிக் கெந்தேனித் தேறுகிறதுமாய்ச் சகல அக்கிரமங்களுமல்லாதே கிரமமில்லாத விடமாயிருக்கிற ஐதலமானது துர்க்கந்த நரகமென்று சொல்லப்படும். அதிலே விழுந்த பாவிகளென்னப்பட்ட பேர்களெல்லாரும் ஊழியுள்ளளவும் துக்கசாகரத்தோடே வேகாமல் வெந்து சாகாமற் செத்து அழியாமல் நாறி ஓயாமல் ஆக்கினைப்பட்டுப் பாடுபடுவார்கள். இதுவுமன்றியே நரகத்திலே விழுந்து சபிக்கப்பட்டபாவிகளெல்லாரும் சுவாமித்துரோகிகளாய் இருப்பதினாற் பசாசுக்கடிமைப்பட்டு எந்நேரமும் நீசர்களேப்போலே அடிபட்டு அவலட்சண அருவருப்புள்ள விடக்கராய் நாறி எப்போது நிர்ப்பாக்கியர்களாய் ஒழியாத பசியும் பொறுத்து முடியாத தாகமும் அனுபவித்து எந்நேரமும் உடல் நடுநடுங்கிப் பல்லுக்கடி நெறுநெறெனக் கடித்துச் சுவாலித்து மிஞ்சின கோபத்துடனே மனம் வெந்து நொந்து தூஷணமுள்ள வார்த்தைகளைச் சொல்லி நல்ல தொன்றுஞ் சொல்லவறியாத அஞ்ஞானமுள்ளவர்களாய்த் துர்க்கந்த நரகத்தில் இடைவிடாமற் கஷ்டக்குழியிலெந்நேரமும் புரண்டுணையாத அக்கினிச்சங்கிலியினும் பசாசுக்கடிமைப்பட்டவர்களாய்க் கட்டப்பட்டு அவநம்பிக்கையோடே வற்றாத கண்ணீர் விட்டழுது மீட்கியில்லாமற் பிரலாபித்து இரக்கமில்லாத வன்னெஞ்சர்களாய்த் தங்களில் எப்போதுங் கண்டித்த அருவருப்போடே வெட்கித்து நரகத்தைவிட்டுப் புறப்படாமற் கிடந்த கிடையாய் வெந்தழுந்தி என்றென்றைக்கும் பாடு படுவார்களென்றறி. அப்படிப்பட்ட அணையாத அக்கினி நரகச்சமுத்திரத்திற் பாவிகளானவர்கள் விழுந்ததின்பின் அதிலெப்பொழுதும் மூழ்தியிருக்கிறதினால் அவரவர்களுடைய கண்களிலேயும் வாய்களிலேயும் மூக்குகளிலேயும் கைகால்களிலேயும் உரோமத்துவாரங்களிலேயும் தேல்லரம்பு எலும்பு வயிறு குடல் ஈரல் இருதயங்களிலேயும் அக்கினிப் பிரவேசம்பண்ணித் தங்கள் சருவாங்கங்களிலேயும் ஊடுருவிப் புறப்பட்டுச் சூலையிலே போட்ட கட்டை எரிகிறதுபோல நரகத்துக்கு அணையாத கட்டைகளாயெரிவார்கள். இதுவுமல்லாமற் செங்கல்லுமதில்களிலே நெருங்கியிருக்கிறதுபோலவும் செக்கிலே போட்ட எள்ளு நசுங்குகிறதுபோல்வும் நரகத்திலே விழுந்திருக்கிற மூடாத்துமாக்கள் ஒருத்தன்மேலொருத்தன் நெருங்கி விழுந்த இடையாய் அக்கினி நரகச்சமுத்திரத்திலே ஊழியுள்ளளவுந் தஞ்சமில்லாமலத் தயங்கி மூச்சுவிடாமற் பதறி நரகவாதைகளைப்படுவார்கள். ஐ! பாவிகளே இப்படிப்படுவீர்களென்றே பகையில்லாத துர்மதங்களே அனுசரித்தீர்கள். இப்படி வேகமோ பொய்யான தேவர்களே யேகவஸ்துவென்றராதனை பண்ணினீர்கள். இப்படிப்பட்ட பாடுபடவோ எளிய சனங்களை உபத்திரப்படுத்திப்படிப்பட்ட அகங்காரிகளாய்த் திரிந்தீர்கள். இப்படி நாறவோ உங்கள் சரீரங்களை நீராட்டி மினுக்கி இனிய ஆபரணங்களினாலே பூண்டணிந்தீர்கள். இப்படி வற்றாத கண்ணீர் விட்டழவோ வீண் பிரபஞ்ச வாழ்வுகளிலே மனமகிழ்ந்து காமலீலையே சுகமென்றெண்ணினீர்கள். இப்படி நிந்தைப்படவோ புறத்தியாரேலவைத்த கண்டித்தைச் சாகுமளவும் விடமாட்டோமென்று சவஞ் சாதித்தீர்கள். இப்படிப் பசாசுகளுக்குச் இறையாய் இருக்கவோ சற்குருவின் வார்த்தையை மறுத்து நடந்திர்கள். அக்கினிச் சங்கிலிகளாலே நீங்கள் கட்டப்படவோ ஆண்டவருடைய கற்பனையின்படியே நடவாமலிருந்தீர்கள். பொறுத்து முடியாத தீங்குப் பசிதாகமனுபவிக்கவோ கட்டளையிட்ட ஒருசந்தியுபவாசம் பிடியாதேபோனீர்கள். இந்தக் கொடுமையான தரித்திரத்தை அனுபவிக்கவோ பிச்சைக்காரருக்குப் பிச்சைகொடாதே போனீர்கள். இந்தக் கஷ்டமான குழிகளிலே புரளவோ பரலிலிருக்கை அலங்கரித்துக் காமாதுரர்களாய் நடந்தினீர்கள். இப்படி மனசுக்குப் பொறுத்து முடியாத தூஷனங்களைச் சொல்லவோ உங்களுடைய வாயில் நின்று பொய்யாணை புரளிகளும் குண்டணிகளும் நிந்தை வார்த்தைகளுஞ் சொல்லிப் புறப்படச் சாதனை பண்ணினீர்கள். இப்படிப் பசாசுகளுக்கடிமைப்பட்டவர்களாய்க் கீழ்ப்படிந்து நடக்கவோ உங்கள் மாதாப்பிதாக்களை நிந்தித்தடித்தீர்கள். அசையாத கட்டைகள் போலொருத்தன்மேலொருத்தன் நெருங்கியிருக்கவோ கட்டளையிட்ட திருவாக்கை ஆசரியாமற் கருத்துடன் பூசைகாணுமற் சோம்பலாய்த் திரிந்தீர்கள். இந்தச் சாகாத சாவு சாகவோ கொலைபாதகத்தைச் செய்யத் துணிந்தீர்கள். ஐ! பாவிகளே கர்த்தத்துரோகிகளாய் மரணபரியந்தம் நடந்திருலுப்பொழுது துர்க்கந்த நரகத்திலேயுழியுள்ளளவும் நரகத்தின் வாதைகளே அனுபவிப்பீர்களென்பதற்குச் சந்தேதமில்லை. அப்படியே துர்க்கந்த நரகத்தில் வெந்தழுந்தியிருக்கிற சபிக்கப்பட்ட துரோகிகளுக்கு உலகத்திலே மூன் அவர்கள் அனுபவித்த சுகசௌக்கியங்களொன்றும் காணுமல் வெந்துசெனங்களுடைய சகாயம் வராமல் மிகுந்த துக்கசாகரத்தோடே மனம் நொந்து வெந்து வேகாத பாதகராய் இப்படிப்பட்ட துர்க்கந்த நரகத்திற் கொடிய ஆக்கினைப்படுகிறவர்களைக் கண்டாயோ. அவர்கள் பாதகத்தின் வழியிலே நடந்ததினாலே நரகத்திலே விழுந்ததுபோல நீயும் பாவத்தைவிடாமற் சாதித்தாயானால் வருகிற ஒடுக்கம் இத்தத் துர்க்கந்த நரகந்தானேயென்றறிந்து சுகிர்த புண்ணியங்களைத்தேடி மனதைவைத்தாலே கருமத்தின் கருமமென்று கண்டு பாதுகா! பாவத்தைச் சீக்கிரத்திலே விட்டுப் புண்ணியத்தைச் செய்ய விரும்பக்கடவாய். (முதல்வித்தியாசம் முற்றுப்பெற்றது)

குறள்—ய. அதிகாரம்.

இனியவைகூறல்—*On sweetness of speech.*

கூக. இன்சொலினிதீன்றல் காண்பானெவண்கொலோ
வன்சொல் வழங்குவது.

பு. பிறர் சொல்லிய இனிய சொல்லானது தனக்கு இன்பந் தருவதை அநுபவித்து அறிபவன் அதை விட்டுப் பிறரிடத்திற் கடுஞ்சொல்லைச் சொல்வது என்னபிரயோசனத்தைக் குறித்தோ, எ—று.

Why does he use harsh words who sees the pleasure which sweet speech yields? *Drew.*

O, wherefore useth he discourteous words
Who knows full well the sweets of courteous speech. *Ellis.*

ஈ. இனியவுளவாகவின்னுதகூறல்
கனியிருப்பக் காய்கவர்ந்தற்று.

பு. தருமத்தையுண்டாக்குகின்ற இனிமையையுடைய சொற்களுந் தனக்குண்டாயிருக்க அவற்றை விட்டுப் பாவத்தை உண்டாக்குகின்ற இன்பமில்லாத வையாகிய சொற்களை ஒருவன் சொல்வது இனிய கனிகளுந் தன் கையில் உண்டாயிருக்க அவற்றைப் புசியாமல் இனிமையில்லாத காய்களைப் புசித்ததோடொக்கும், எ—று.

To say disagreeable things when agreeable are at hand, is like eating unripe fruit when there is ripe. *Drew.*

Discourteous words when courteous may be used
Is like the sickly appetite, which calls
Fruit immature, leaving the ripe untouched. *Ellis.*

களங்கமில்லாத பால்—ஒரு கதை.

[The "Milk of the Word"]

ரோமான் கத்தோலிக்க திருச்சபையைச் சேர்ந்த பால்வியாபாரியொருவனிருந்தான். அவன் வாடிக்கையாய்த் தேவ வசனத்தை வாசித்து வருகிறானென்பதை ரோமைக் குருவானவரொருவர் கேள்விப்பட்டு அவனிருந்த வீட்டுக்குப் போனார். அவன் ஏதோ வீட்டுக்கருமங்களில் முயன்றிருப்பதைக்கண்டு— நீ வேத வசனத்தை வாசித்து வருகிறாயென்று நான் கேள்விப்பட்டேன்.

அதுமெய்தானா? என்றார். அதற்கு அந்தப் பாற்காரன், தேவரீர் கேள்விப்பட்டதும் நான்வாடிக்கையாய் வாசித்துவருவது முண்மைதான். ஏனென்றால் அதொரு நேர்த்தியான புத்தகம், என்றான். குருவானவரிதைக்கேட்டு, வேதபுத்தகங்களை வாசிப்பதினால்மோசம் விளையுமென்று அறிந்திருக்கிறாயே. உன்னைப்போலொத்த ஒரு அறிவிலியானவன் இப்படிச் செய்வதற்கியாதொரு நியாயமுமில்லை என்றார். அப்பொழுது பாற்காரன் ஆ சாமி! மோசம்வருமென்று நீர் எனக்குத் திருட்டாந்தப்படுத்தினாலன்றி மற்றும்படி நான்வாசியாமல் விடுவதில்லை என்றான். அங்ஙனம் அவர்களிருவர்க்கும் நடந்தசல்லாபமாவது—குருக்கள்—நானதை உனக்குச் சீக்கிரந் திருட்டாந்தப் படுத்துவேனென்றார். பாற்காரன்: சாமி அப்படிச் செய்வதுண்டானால் நானதையொருக்காலும் வாசியாமல்த் தங்களுக்குத்தானே அதைக்கொடுத்துப்போடுவேனென்றான். உடனே குருவானவர் தேவபுத்தகத்தை எடுத்து நீங்களிரட்சிப்புக்கேதுவாக வளரும்படிக்கு இப்பொழுது பிறந்த குழந்தைகளைப்போலத் தேவ வசனமாகிய களங்கமில்லாத பாலின்மேல் ஆசையாயிருப்பீர்களாக என்று பேதுரு. உ. அதி. ௩. வசனத்திலிருந்து வாசித்துக்காட்டி, இங்கேபார், நீதானே வேதாகமத்தை வாசிப்பதினால் மோசமுண்டாகும், நீயொரு சிறுகுழந்தையைப்போலிருக்கிறாய் (தேவ) வசனமாகிய களங்கமில்லாத பாலின்மேல் ஆசைவைக்க வேண்டுமென்றுனக்குக் கட்டளை கொடுத்திருக்குது. களங்கமில்லாத பாலியாதென்பதின் திவ்வியார்த்தத்தை அறிகிறவன்தானே அதை உனக்குக் கொடுக்கவும் உன்னைப்பராபரிக்கவும் வேண்டியது என்றார். அப்பொழுது பாற்காரன் குருவானவர் கண்டிப்பாகச் சொன்னவைகளை உற்றுக்கேட்டுப் பிரத்தியுத்தரமாகச் சொன்னதென்னவெனில், ஆசாமி! நானொரு கதைசொல்லப்போகிறேன், அதைக்கேட்டு மனங்கலங்காதையும். அக்கதை யாதெனில், சிறிதுநாளைக்கு முன்னே நான் துன்பமாயிருந்ததினால், என் பசுக்களிற் பால்கறக்கவும் மற்றும் வீட்டுவேலைகளைப் பார்க்கவும் ஒருவனைப்பிடித்துவைத்துச் செய்வித்துவந்தேன். அவனெனக்குச் செய்ததைப் பாரும். மாட்டிலே பாலைக்கறந்தெடுத்துக்கொண்டு கொஞ்சப்பாலை எடுத்து அதற்குள்ளே தண்ணீரைவிட்டு எனக்குத்தந்து அப்படியே என்னை அணாப்பினான். அதுபோலவே, சாமியுமெனது வேதாகமத்தை வாங்குவதுண்டானால், அந்தமாதிரியே எனக்குச் செய்யக்கூடும். ஆகையால் நம்மிடம் என்பசுக்களைவிட்டுத் தண்ணீர்கலந்த பாலைவாங்குவதிலும் நானென்பசுக்களை வைத்துக்கொண்டு நான்தானே பால்கறந்துகொள்ளுவத்திகந் திறமென்றான். குருவானவரிதைக்கேட்டு வெட்கி மனமடிவுகொண்டு இதையொருவர்க்கும் அவன் பேசாதிருக்கும்பொருட்டவனுக்கிதமான வார்த்தைகளைச் சொன்னார். எப்படியெனில், நல்லது தம்பி, நானினைத்திருந்ததிலும் நீசற்றே யூகிபோலிருக்கிறாய். நீயொரு சிறுகுழந்தையாயிராதபடியால். நீதானே உன் வேதபுத்தகத்தை வைத்து வாசித்துக்கொண்டிருக்கிறதேயன்றி மற்றுமபேருக்கதை இரவலாயுங்கொடாதை. அவர்கள் கேட்கும்படி அத்தைவாசிக்கவும்படாது, என்றார். அப்பொழுது பாற்காரன், ஏதுசாமி, என்னிடத்திலே பாலருக்கும்பொழுது பாலில்லாதவர்களுக்குக் கொடுக்கக் கூடாதோ? அப்படிச்செய்வது கிறிஸ்தவனுடைய கடைமையல்லவோ? என்றான், குருவானவரிதைக்கேட்டு வெட்கிக்கலங்கிப் பராபரனுடைய சுத்தமானவசனங்களை எங்குஞ் செல்லவிடுவதினால் ஆத்துமாவைச் சிறையாகவாங்குகிற பாப்புமதமென்னும அலங்கம் நிருதூளியாய்ப்போகவேண்டுமென்று மனதில் நிச்சயித்துணர்ந்து சாதுரியமாய் அவனைவிட்டப்புறம் அகன்றுபோய்விட்டார்.

தென்சமுத்திரத்தீவில் நடந்த சங்கதி.

Missionary Enterprises in the South seas.

(Continued from page. 206 Vol. III.)

மேலும் இதுகாரியங்களையெல்லாம் அவர்கள் கேள்விப்பட்ட உடனே (கப்பித்தான் குக்கு) என்பவர் இவர்கள் பெரிய வள்ளமென்றுபாவிக்கிற அவருடைய கப்பலிலே தங்களுக்குத் துப்பாக்கிகளையும், கோடரிகளையும், ஆணிகளையும் ஏற்றிக்கொண்டு வரும்படி தங்களுடைய தேவனைப் பார்த்து மன்றாடத் தொடங்கினார்கள். இவர்கள் பண்ணினசெபமாவது, "ஆ! பெரிய தங்காராவே, உம்முடைய பெரிய கப்பலை எங்கள் தீவுக்கு வரப்பண்ணும் எங்களுக்கு அந்தவெள்ளைமனிதரைக் காட்டுமேன், பெரிய தங்காராவே, அந்தக் கீர்த்தியுள்ள சனமாகிய (கூக்கீசு) என்பவர்கள் எங்களை வந்து காணப்பண்ணும், அவர்கள்எங்களுக்கு ஆணிகளையும் இரும்பையுங் கோடரிகளையுங் கொண்டுவரக் கட்டளைபண்ணும் என்று இவ்விதமாகத் தங்களுக்குண்டான தேவர்களுடைய நாமங்களைச் சொல்லிச் செபம்பண்ணினார்கள். இப்படி இருக்குஞ் சமையத்தில் சடுதியாய் ஒரு கப்பல் அவர்கள் தீவிலே வந்துந் தாமதியாமற் போய்விட்டது. இந்தக் கப்பலைக் குறித்து அவர்கள் சொன்ன விபரத்தினாலே அது வவுண்டியென்ற கப்பலென்று நினைக்கிறேன். இந்தக் கப்பலைப் பார்க்கப் போகிறதற்கு ஒருவன் துணிந்து தன்னுடைய வள்ளத்திலேறிப்போய்ப் பார்த்ததின்பின் திரும்பக் கரைக்குவந்து அது மிதந்துதெரிகிற ஒரு தீவாயிருக்கவேணும் ஏனெனில் அதிலிரண்டு ஆறுகளோடுகின்றன; வாழை, கரும்பு முதலிய புரோசனங்களும் அதிலே உண்டாகுதென்று சொன்னான். இதில் அவன் சாம்பியினாலே சாம்பப்பட்டு ஓடுகிற தண்ணீரை நதிகளென்றும், அந்தக் கப்பலிலேயிருந்த நீலப்பெட்டகங்களைப்பயிர்வகைகளென்றும் மோசமாய் நினைத்துச் சொன்னான். இந்தக்கப்பற்காரர் பார்க்கப்போன இவனுக்கு இரண்டு முழததிலே ஒரு இரும்புக்கூராம்பாய்ச்சியை உபகாரமாய்க் கொடுத்தார்கள். அதை அவன் கொண்டுவந்தபொழுது எல்லாருமாய்க்கூடி அதைக் காணிக்கையாகத் தங்களுடைய தேவனுக்குக் கொடுத்தார்கள். ஆகிலும் நிலத்தைப்பயிரிடுகிற பொழுது, இந்த ஆயுதத்தைத் தேவனிடத்தில் இரவலென்றுசொல்லி எடுத்துக்கொண்டுபோய்ச் செய்கைபண்ணிப்பின்பு கொண்டுபோயதின் தானத்தில் மறுபடியும் வைத்துவிடுவார்கள். இந்த ஆயுதத்தைக்கொண்டு செய்கைபண்ணிஉண்டான புரோசனமென்னென்னவுண்டோ அத்தைநாலாய்ப்பகிர்ந்து மூன்று பங்கையுங் கொண்டுபோய் விக்கிரகத்துக்கு முன்னேவைத்து இதிலொருபங்கு புரோசனமுண்டாகப்பண்ணினதற்கு நன்றியறிதலாகவும், ஒருபங்கு இருப்பாயுதம் இரவலாய்க்கொடுத்ததயவுக்காகவும், ஒருபங்கு இன்னுங் கப்பல்களைத் தங்களூருக்கு வரும்படி அனுக்கிரகம் பண்ணுகிற தயவுக்காகவும் என்று சொல்லி அவ்வளவையுங் காணிக்கையாகக் கொடுப்பார்கள்.

(இராயதோங்கு) தீவு (தகத்தியன்) (சேசாயுத்தி) முதலிய தீவுகளைப் பார்க்கிலுஞ் சிறப்பாயுஞ் செழிப்பாயும் பலவகையான பயிர்வகைள் உண்டாகக் கூடியதாயிருக்கின்றன. நிழலும், நிழற்கீழ் உழுக்கார்ந்திருக்கக் கூடிய மேடைகளுமுண்டு. முன் சொன்ன தீவுகளிலே அப்படியில்லை. இந்த விசேஷங்களைத் தொட்டு இந்தத்தீவு மற்றுந்தீவுகளைப் பார்க்கிலும் விசேஷித்திருக்கின்றது. சனங்கள் வேலையைவிட்டு இளைப்பாறும் வேளையாகிய சாயங்காலங்களிற் பெரும்பாலும் முன் சொன்ன மேடைகளிலேபோயிருந்து கூடிப்பேசுவார்கள். ஒருநாளாகிறபொழுது நான் (வஸ்கோற்று) என்பவருடைய வீட்டிலிருந்து (பிற்றுமன்) என்பவருடைய வீட்டுக்குப் போகையில் ஒரு மேடையிலுழுக்கார்ந்திருந்த (வீற்றி) என்னப்பட்ட சப்பாணியொருவன் முழந்தாளினாலே நடந்துகொண்டு இரட்சிப்புக்கான வார்த்தையும், இருளுக்கான வெளிச்சத்தையும் எங்கள் தீவுக்குட் கொண்டுவந்த பராபரனுடைய தாசனே உமக்குச் சுகமுண்டாவதாகவென்று சொல்லிக்கூப்பிட்டுக்கொண்டு என்னண்டைக்குவந்தான். இந்தச் சப்பாணிமூன்றுபிள்ளைகளையும் பெண்சாதியையுந் தாபரிக்கிறதற்கு வயலிலே வேலைசெய்துவருவான். எப்படியெனில் ஒரு கருங்காலிக் கூர்ப்பொல்லை நாரிக்குங் கைக்கிடையிலும் விட்டுச் சரீரத்தின் பாரத்தினாலே யூன்றி நிலத்தைக் கிண்டுவான். கையிரண்டையுங் கூட்டிப் பாத்திகட்டிக் களைபிடுங்கி வருவான. அவன் என்னைக்கூப்பிட்டு இரட்சிப்பின் வசனத்தைக் குறித்துப் பேசிக்கொண்டு வந்ததினாலே, இரட்சிப்பைக் குறித்து எதுவுமுனக்குத்தெரியுமாவென்றேன். அவன் மறுமொழியாகப் பாவிகளை இரட்சிக்க உலகத்தில் வந்த இயேசுக்கிறிஸ்துவைக் குறித்து நன்றாய் அறிந்திருக்கிறேனென்று சொன்னான். இயேசுக்கிறிஸ்துவைக் குறித்து என்ன அறிவாயென்றேன் அவன், அவர் பராபரனுடைய குமாரனென்றும், அவர் மனுஷருடையபாவங்களைத்தீர்ப்பதற்காகச் சிலுவையிலே பாடுபட்டாரென்றும், அவராலிரட்சிக்கப்படுகிறவர்கள் மோட்சத்துக்குப் போவார்களென்றுஞ் சொன்னான். பின்னையெல்லாரும் மோட்சத்துக்குப் போவார்களல்லவாவென்றேன். அதற்கவன் அவரிலுண்மையாய் விசுவாசித்துச் செபம்பண்ணி வருகிறவர்களேயல்லாமல் மற்றவர்கள் மோட்சஞ்சேரக் கூடாதென்றான். அப்படியானால் நீ யெப்பொழுதுஞ் செபம்பண்ணிவருகிறாயாவென்றேன்.

இன்னும் வரும்.

உதயதாரகை—MORNING STAR.

Jaffna, August 8th, 1844.

TO EDUCATED NATIVES.

We were last discoursing with you on the importance of moral principles founded in piety or the fear of God, and especially of the importance of a *love* and *practice of Truth*. We wish to hold your attention to this subject a little longer, for we are persuaded there is no one thing of more essential importance to your present and future well being than this. Bear with us then, while we proceed with such remarks as we have to offer.

Endeavour to impress your own minds deeply with a sense of its importance. There are scores of half-educated young men, who would say—"Yes sir, yes sir," to all we have urged on the subject, and in the turning of one's back, if occasion offered, would lie, and lie, and lie, even with solemn asseverations, as if they had been training under the evil one from their infancy. It is awful to think what a damnable plunge in falsehood and deceit your countrymen have made under the degenerating influences of their false religion. This is strong language, but it is all deserved, as many of you know full well. What instances of desperate and blasphemous lying have occurred under the notice of every missionary. In many cases too of those who had long professed to fear God and keep his commandments. What is the testimony of our civil and criminal courts on this point. False witnesses may be had all over the land for six pence or a shilling. Deep are the wounds in the peace, happiness and prosperity of your people made by this soul destroying, evil working sin of lying. Let it be impressed on your minds then that it is an evil, and a very great evil. It disruptures every bond of society, and forces man to prey upon his fellow by the arts of cunning and by the weight of superior power.

You are the ones to work out the cure of this great national evil. Those of you who have been intimately connected in your business with gentlemen of honour and integrity have learned by their example to appreciate in some degree those qualities, which sentiments your countrymen at large have never conceived of. We have been pleased to remark in illustration of this, the striking contrast presented, in business dealings with a native who has been conversant only with natives, and with one who has had considerable dealing with Europeans.

Set before you for examples in the formation of your characters, the wise and the good, and not the proud and presumptuous. The wicked may flourish for a time like the green bay tree, and many a humble soul may be envious at their prosperity, but their end is rottenness and death. They shall be sought for and not found, while the righteous shall be exalted to inherit the land. The wheel of God's Providence rolls on with a determinate purpose to exalt the humble and debase the proud, and though many proud ones climb to the top, and swagger for awhile in their imaginary greatness, they shall pass away and their memory be forgotten. "A little that a righteous man hath is better than the riches of many wicked."

Be persuaded your only sure course of self-elevation is on this foundation. Your progress may at first be slower than that of some others, but it will be more certain. The difficulties of this course are more imaginary than real. One temptation successfully encountered will give you increased strength to overcome a second; and when your principles are established, you will wonder at your former weakness and folly. Firmness of purpose and decision will enable you to meet every seducer with a peremptory denial, and the satisfaction of having elevated yourself to a position in morals, where you can respect yourself and enjoy the respect of others will be a source of lasting peace and happiness.

For the Morning Star.

MR. EDITOR:

There seems to be a general complaint among Europeans in this country, that most of the young natives educated by the missionaries make no progress in knowledge after leaving the seminaries, and even go back, in some measure, to their old habits of heathenism. I have not been in the country long enough to have seen this for myself, and to understand it as well as I could wish. From the known inertness of the native character, I cannot doubt, even without the testimony of others, that to some extent, such an evil exists. But from the circumstances of the case, I suspect that there is something to be said on the other side; and the object of this communication is to make the inquiry.

These young men have often heard that it is exceedingly desirable to be acquainted with the English language, in order to have access to its great treasures of knowledge. But has not this subject been presented to them in a blurred and indistinct way, so as to convey the impression of something high, and huge, and distant, without any respectable and tolerably easy *intermediate* attainment, plainly within their reach? For example, they look at an English Library. Here they get the no very distinct or stimulating idea of *books, books, books*; books in general; there are before them some dictionaries, some bodies of divinity, some of the Tract Society's publications, some shelves of Sabbath School books, some shelves of Encyclopedias, some rows of Magazines bound and numbered, some voluminous Commentaries, some biographies of English and American pastors, of little more than local interest; a few books of poetry, some outlines of history, geography, &c. &c. All these together make up what is called a *library*, a body of English *literature*. This library may contain two or three or half a dozen of the really great and important works of the language; but they, with the rest, are to Tamil youth, only *books*, having the same external appearance. Have they ever been made to understand, or rather have they ever heard, that there is a vast difference between a first rate English book and common English books? For example, that grand work, Bishop Sumner's *Evidences of Christianity derived from its Nature and Reception;* a work original in plan, neat in diction, logical in arrangement, acute and convincing in argument, rich in thought and of vast reputation; a fine specimen of the cultivated mind of Christian Europe; and well deserving, as such, to be urged upon the attention of young Asiatics. It has also the recommendation of being unusually *complete in itself;* that is, not full of allusions which require a library of reference books, or pre-suppose much general information; it may be read and understood, at their own homes, by those who have a tolerable knowledge of English, and the general ideas of the Bible obtained in the mission seminaries. It is not abstruse, like Butler's Analogy; yet it requires some labor, and may be read again and again, and dwelt upon, with great profit, for a long time. It is also a book of *universal* interest, and of *permanent* value; the young native who buys it will not find it superseded many years hence, but as valuable as ever, for himself or his children.

But I hear it objected that it is no easy matter to excite this class of readers to make the requisite effort to master such a work. There are certainly some who are able to do it, if they were inclined; this is something. I read, in the history of England, that Alfred the Great was induced to learn to read by the promise, from his step-mother, of the gift of a manuscript of Saxon poetry, no small present in those days. Was the knowledge he obtained the less valuable for having been introduced into his mind by such a motive? Once in, it could not easily be got out. So missionaries have sometimes induced children to come to school for a while at first, by paying them for it. Can we not appeal to these young men's *love of money* to urge them upward a step further in intellectual cultivation and this without any great expense? How would it do to make accessible to the students who have left the schools, and to others who understand English, a dozen or twenty or thirty copies of "Villers' Essay on the Influence of the Reformation," and then offer some tens of rupees to the one who in six or nine months should best stand an examination in it; a smaller sum to the second best, and a still smaller to the third? Would not the effort which would be made to become familiar with it, enrich the minds of a considerable number with a most important class of new ideas?

It perhaps may not be generally known to the European readers of the Star, that this is a work translated from the French, to which a prize was awarded by the National Institute of France. It shows the vast influence which the Reformation has had on the politics of Europe, on the European languages, the fine arts, history, study of the ancient languages; on liberty of thought, Philosophy, Belles-lettres, Theology, Law, Morals, &c. The American reprint can probably be had for a rupee or a rupee and a half a copy.

Might not some, at least, of those who cease from all mental effort after leaving school, make some such complaint as this, and with some propriety: "You find fault with us, but you give us no definite ideas of the course we ought to pursue. No one will make an effort without some definite object. You say we may study English books; but most of those within our reach are of an insignificant or very miscellaneous character, some of which we have read attentively, but without much profit. School books alone will not do. Show us a few of the works which you consider as great and enriching to the mind; such as will bear to be studied over and over again, and yet not so voluminous but that they can be mastered within a reasonable time, and not so expensive as to be beyond our means. Where is there to be found, in Jaffna, an assortment of such books to which we can resort? Suppose the natives of Calcutta who have made respectable attainments in English literature had been confined to this island, where would they have got their books? We do not expect, here, where the demand is so small, that a large stock can be kept; but might there not be at least a few well selected works in general literature, where persons of different tastes may be suited? Let a few first rate ones stand out from the mass, and let us be assured that in each one we master we shall obtain a treasure. Some even who are secretly averse to religious works might nevertheless be improving in general knowledge, if the requisite books were accessible."

Suppose, Mr. Editor, this plan should be *tried;* if it should not work well, we should at least have ascertained that it is not a good one, and that these minds must be resuscitated in some other way. I make the suggestion with unfeigned diffidence; and if no notice should be taken of it, I shall conclude that it is not acceptable, and say nothing more about it. N.

We thank our correspondent for the above communication, and invite the attention of our readers to it—both of natives, and of the friends of Native improvement. We think the experiment he has suggested worthy of a trial. We have often heard it remarked by those more conversant than ourselves with the native mind in the process of education, that natives have capacity to learn any thing they are distinctly set to learn. It is set lessons they want, and in them they will rival the students of any nation. Here then is an essential element of acquisition and improvement. But they have not motive enough in themselves for persevering study. An *honorary medal* or a *reward of money* for successful application in a given course, would set the blood a flowing more rapidly in many sluggish souls. There would be no difficulty, we conceive, in providing the medals and rewards, or the books. Many gentlemen would gladly contribute a small sum for such an object if the plan could be arranged in a satisfactory manner. And now we bethink ourselves, there is a *Native improvement Society* in Jaffna; and the Honorable, the Chief Justice, who is now attending the Court Sessions here is its distinguished Patron. Under what better auspices could the experiment be set forward than those of this Society. We would earnestly call the attention of the Committee to the subject, and can assure them of a hearty co-operation with them in the undertaking from many quarters.

Return of an Apostate.—The Madras Native Herald of July, gives an interesting account of the return to Christianity of S. P. Ramanjooloo, Naidoo, of Ragapattah, who was first baptised in July, 1841, but afterwards returned to heathenism and the worship of idols, through the enticements of his friends.

On the Tuesday after his baptism, his mother and female relatives came to the Assembly's Mission House, and assailed him with piercing shrieks, tears, and entreaties, imploring him to go home with them. When his mother threw her arms round his body, and held him fast, and said, "Protect me,"—his heart melted like water, and he cried, "My bowels yearn over her, I must go with her to comfort her. I will go, and come back in two days." At this point his apostasy commenced. In vain was he earnestly warned of his danger from the word of God with tears and entreaties, by the missionaries and the first three converts. His heart had given way; and in the evening of that day, the 12th July, he left the Mission-House. From the time of his departure, and especially after he fell down before the idol at *Triplicane*, the hand of God was heavy upon him, and his arrows pierced him sore. The reports that reached them from time to time of his misery and desolation pierced and grieved the hearts of the missionaries and converts, and constrained them to pray for him, though they hardly knew how to pray; his case appeared so desperate. The strong conviction of many Christian friends, and of one friend in particular, was, "that God the Holy Ghost had taken this method to subdue, and tame, and sanctify him." We fervently trust it is so.

More than a year ago, the missionary who baptized him had an interview with him until midnight, in the house of a native Christian, when he expressed his purpose of coming back to the church of Christ along with his wife, whom some time before he had begun to instruct in the first principles of Christianity. But when told what he must do as an apostate, before he had a right scriptural warrant to come and could be re-admitted into the Church, his pride, as he now acknowledges, stood in the way and kept him back. Still the indignation of the God whom he had forsaken pressed his spirit sore, and would not let him escape. He complained of the worm within, and of thorns in his back and sides, and of a constant fear in his heart.

After two years of apostasy he has come back accompanied by his wife, apparently with unfeigned repentance and a sincere determination to live for the glory of his Saviour and was readmitted to membership in the Christian Church on the 14th of July.

After his return, he addressed letters to his mother and his father-in-law, stating what he had done, and inviting them if they would to follow him; but declaring his determination to forsake them if they would not follow him. We give the letter sent to his mother.

My Dear Mother,—I was baptized on the 10th of July 1842, by the Rev. John Anderson, according to what is said in Christianity. On the self-same day, I ate all that Europeans eat, and with Europeans. On Friday evening the 12th of July 1844, I and my wife came here, and took our meals by mutual consent, without any distinction of *Caste*. We are not willing to live among you who worship idols. In consequence of your taking me away before, I became sunk in mental disease; therefore I entreat you, my sisters, their husbands, and every one else, not to come—either to see us, or to speak with us.

Mother, your chief duty is this: as there is no salvation for the souls of us sinners in any one else except in Jesus Christ, I, as your son, with my whole mind, and with much affection, entreat you also to come into the religion of Jesus Chrst. If you are willing to come and abide with me, you can consider this matter well, and may come. If not, you need not come; because I will not follow you, I will not accompany, or live with you at all. I will not worship idols. If you are willing, you can come to me, and worship the true Saviour Jesus Christ.

General Assembly's Mission House, } S. P. Ramanoojooloo.
13*th July* 1844. }

This case brings up in affecting review a long list of apostatisers from the Christian faith, in this vicinity, who like Ramanoojooloo, in his apostacy, are bowed in spirit, and cursed with the curse of a self-tormenting conscience. Having sacrificed their godliness for gain, they find their gold and silver is cankered, and it eateth their flesh as it were fire. Some, it may be have sunk below all sensibility and shame, and stand forth before the community as avowed reprobates; but there are many, it is believed, who sometimes look back with desire to the height from which they have fallen. They go about as with a fire in their bones, seeking peace and finding none. If these lines should fall under the eye of any such, we beg to assure them that they are not forgotten by those who rejoiced over them in the day of their espousals to the Saviour, and they are not forgotten by that Saviour whom they then publicly acknowledged to be their rightful Lord. Though they have grievously wounded him in the house of his friends, though they have abused the confidence and ill requited the long continued efforts for their good of their former friends and benefactors, let them but return with repentance and renewed love, and all will be forgiven. As the father of the prodigal in the Gospel, rejoiced over his son's return as over one who was dead and is alive again, so would the Saviour and the missionaries rejoice over these if they should thus return. We hope our missionary friends will feel encouraged by the return of Ramanaojooloo, to plead with more earnestness and faith with the God of grace and supplication to have compassion on these poor souls now wandering on the dark mountains of death. His grace is all sufficient, and he will be enquired of for these things.

Controversy among the Brahmins at Bombay.—The controversy that has arisen among the Brahmins at Bombay, on the question of the propriety of receiving back to caste the youth Shreeput, who has defiled himself by eating with the missionaries, is magnifying itself beyond all our expectations. It appears, that the party opposed to the youth's reception have indignantly excommunicated from their Society, refusing to eat with them, all those who persist in advocating the propriety of his return. Being by far the most numerous party, they are able to sustain by craft and power the ends that their arguments could not effect.

Thus we learn from the *Dnyanodaya* that "on the first day of the Hindu year, when an annual present is made in Bombay to all Brahmin priests who apply, it was determined by those who had charge of the distribution, and who it appears were opposed to the reception of the boy into caste, that no one should be admitted to a participation of that charity, but those who would sign a paper denouncing the conduct of the opposite party." Again, on an occasion of a great entertainment given to all the Brahmins of Bombay, no guests were allowed to enter unless they would agree to abandon the object of restoring the boy, and purify themselves as an atonement for what they had done; and some who had found their way in, and had seated themselves at table and were just commencing to partake of the good things provided, were rudely forced up and thrust out with every indignity, because they were known or suspected to belong to the opposite party. Among those who experienced this treatment were some of the most respectable and learned brahmins of Bombay, who stand high both in the native and European community.

Such arguments as these would naturally fall with weight upon those who have no higher object in view, than to gratify their lusts, and a considerabe number who had before sided with the more intelligent party felt themselves unable to withstand any longer and gave in their adherence to the bigots. But this was not all.

It has been stated that the opinions of learned brahmins had been received favouring the youth's reception to caste. The bigoted party to carry their point more strongly against their opponents also sent to Benares and obtained opinions from other brahmins favourable to their views, declaring that the boy cannot be purified. An assembly of brahmins was thereupon convened to hear these opinions, which of course furnished an occasion of triumph to the bigoted party, who exclaimed to their opponents—"What will you do now? It is decided that the boy can never be purified. And those who have maintained that he could be, must be purified before they can be regarded as good caste." A great commotion was thus excited and many are said to be ready to abandon their opposition and go with the major party. But some remain firm, and it is a little singular that all the native papers unite in advocating the reception of the boy in opposition to the views of the Bhutts or party of bigots. The *Prubhakur* spiritedly replies to their triumphant declarations, "What if a letter has come from a few obscure Bhutts of Benares? What have we to do with them? What! are there no brahmins here as well as in Benares? Are there no learned men here as well as in Benares? Benares can furnish but few as learned pundits as are to be found in Poona and the Marashtra country. What need have we then of the opinions of the Benares' brahmins after having obtained those of Pundits here? And no one can for a moment suppose that the decisions of Pundits here are at all shaken by a contrary opinion received from some learned fools at Benares like the Bhutts of Bombay."

